# இந்துப் பண்பாட்டின் சர்வதேச வியாபகம்: இந்து சமய ஆளுமைகளின் வகிபாகம் – ஒரு மீள்வாசிப்பு

'இளஞ்சைவப்புலவர்' திரு.ஜீ.பால்ராஜ்,
*விரிவுரையாளர்,*
*இந்துநாகரிகத்துறை,*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்தியாவிலே தோன்றிய இந்துப்பண்பாடானது வரலாற்றுக் காலம் தொடக்கம் பல நாடுகளில் பரவலுற்று, இன்று உலகம் பூராகவும் வாழும்மக்களின் வாழ்வியலிலும் இரண்டறக்கலந்து விட்ட ஒரு செழுமையான பண்பாடாகத்திகழ்கிறது. இந்துப்பண்பாட்டினை உலக அரங்கிற்கு கொண்டு சேர்த்து, சர்வதேசவியாபக நிலையடையச் செய்தவர்களில் இந்துசமய ஆளுமைகள் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களது இந்துசமயம் தொடர்பான பிறமொழி ஆய்வுகளும் அவர்களது உலகளாவியபயணங்களும் அங்கு அவர்கள் நிகழ்த்திய உரைகளும், அவர்கள் உருவாக்கிய சமயநிறுவனங்களும் உலகெங்கும் இந்துப்பண்பாடுதன்னை அகலித்துக் கொள்வதற்கு காரணங்களாக அமைந்தன எனலாம். இந்துசமயம், மறுமலர்ச்சியினை அவாவிநின்றபத்தொன்பதாம் நூற்றாண்டுகாலச்சூழலில், பாரதத்தில்விவேகானந்தர், இராதாக்கிருஸ்ணன், ஸ்ரீஅரவிந்தர், சகோதரிநிவேதிதா போன்றவர்களும் ஈழத்தில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி, சுவாமிவிபுலாநந்தர், சேர்.பொன்னம்பலம் இராமநாதன், முதலிய இந்துசமய ஆளுமைகளும் தோற்றம் பெற்று இந்துசமயத்தினை மறுமலர்ச்சியடையச் செய்ததோடு மட்டுமல்லாமல் அதனை உலகளாவியநிலைக்கும் இட்டுச்சென்றனர். எனவே இது போன்ற இந்துசமய ஆளுமைகளின் ஊடாக இடம் பெற்ற இந்துப்பண்பாட்டின்*

*சர்வதேசவியாபகச் செயன்முறை, அதுநிகழ்ந்தபாங்கு, அதன் முதன்மைப்பாடு மற்றும் சமூக, சமய, பண்பாட்டு விளைபேறுகள் பற்றிப்பருமட்டாகபரிசீலிப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின்மைய இலக்காகும். அடிப்படையில் இது வொருதரரீதியான, விபரணவியல் மற்றும் மதிப்பீட்டு ஆய்வு. பிரதானதரவு மூலங்களாகநூல்கள், சஞ்சிகைகள் முதலானவை பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்:*** *இந்துசமய ஆளுமைகள். இந்துப்பண்பாடு, சர்வதேசவியாபகம், வகிபாகம்,*

## அறிமுகம்

உலகில்காணப்படும்பண்பாடுகளுள்இந்துப்பண்பாட்டிற்குஒருதனிச்சிறப்பும் தொன்மவரலாறும்உண்டு. இந்தியாவில்தோன்றியஇந்துப்பண்பாடானதுவரலாற்றுக்காலம்தொடக்கம்பலநாடுகளில்பரவலுற்று, இன்றுஉலகம்பூராகவும்வாழும்மக்களின்வாழ்வியலிலும்இரண்டறக்கலந்துவிட்டஒருசெழுமையானபண்பாடாகத்திகழ்கிறது.இத்தகையசிறப்புமிக்கஇந்துப்பண்பாட்டினைஆய்வுசெய்துஅதனைஉலகஅரங்கிற்குகொண்டுசேர்த்து, சர்வதேசபரிமாணங்கொள்ளச்செய்தவர்களில்இந்துசமயஆளுமைகள்போற்றப்படவேண்டியவர்கள்.உலகநாடுகளில்எங்கெல்லாம்இந்துசமயஆளுமைகளின்காலடித்தடங்கள்பதிந்ததோஅங்கெல்லாம்இந்துப்பண்பாட்டுஅம்சங்களும்பதிந்துவிட்டன. அத்துடன்அங்குவாழும்மக்களின்வாழ்வியலோடும்அவைஇரண்டறக்கலந்துவிட்டனஎன்பதுமறுக்கமுடியாதஉண்மையாகும். இந்துசமயஆளுமைகளின்இந்துசமயம்தொடர்பானபிறமொழிஆய்வுகளும்உலகநாடுகளில்அவர்கள்நிகழ்த்தியஉரைகளும், அங்குஉருவாக்கியசமயநிறுவனங்களும்உலககெங்கும்இந்துப்பண்பாடுதன்னைஅகலித்துக்கொள்வதற்குகாரணங்களாகஅமைந்தனஎனலாம்.

பத்தொன்பதாம்நூற்றாண்டுகாலச்சூழலில், பாரதத்தில்விவேகானந்தர், இராதாக்கிருஸ்ணன், ஸ்ரீஅரவிந்தர், சகோதரிநிவேதிதாபோன்றவர்களும்ஈழத்தில்கலாயோகிஆனந்தகுமாரசுவா

மி, சுவாமிவிபுலாநந்தர், சேர்.பொன்னம்பலம்இராமநாதன், முதலியஇந்துசமயஆளுமைகளும்தோற்றம்பெற்றுஇந்துசமயத்தினைமறுமலர்ச்சியடையச்செய்ததோடுமட்டுமல்லாமல்அதனைஉலகளாவியநிலைக்கும்இட்டுச்சென்றனர்.இவ்வாறுஇந்துப்பண்பாட்டினைஉலகஅரங்கிற்குகொண்டுசேர்த்து, சர்வதேசவியாபகநிலைக்காகஉழைத்தஇந்துசமயஆளுமைகளின்வகிபங்கினைஆராய்வதேஇந்தஆய்வுக்கட்டுரையின்நோக்கமாகும்.

## சுவாமிவிவேகானந்தர்

உலகநாடுகளில்இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைபரப்பிஅதனைசர்வதேசவியாபகமடையச்செய்தஇந்துசமயஆளுமைகளில்இந்தியாவில்பிறந்தசுவாமிவிவேகானந்தர்முதன்மையானவராககருதப்படுகின்றார்.இந்துப்பண்பாட்டுத்தூதுவனாகமேலைநாடுகளில்வலம்வந்தஅவர்,தான்ஏற்றுச்சென்றபொறுப்பிற்குமேலாகவும்செயற்பட்டுஇந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஅதிதீவிரத்துடன்மேலைநாடுகளில்மட்டுமல்லாதுஉலகம்பூராகவும்உள்ளமக்களின்உள்ளங்களிலும்பதியவைத்தார்.

சுவாமிவிவேகானந்தரின்அமெரிக்கசிகாகோமாநாட்டின்சொற்பொழிவுகள்மனிதகுலவரலாற்றில்ஒருபொன்னேடு, உலகநாடுகளில்இந்துப்பண்பாடுஎனும்ஒளியைவழங்கியஒருஉபதேசப்பெட்டகம்என்றெல்லாம்கூறலாம்.இவர்ஆற்றியசொற்பொழிவுகளில் 11.09.1893 அன்றுமுதல்நாள்சொற்பொழிவுஇந்துசமயத்தின்சிறப்புக்களையும், 19.09.1893 அன்றுஆற்றியஉரைஇந்துசமயத்திற்கானவிளக்கத்தினையும்பறைசாற்றுவதாகஅமைந்தன.

முதல்நாளான 11.09.1893 அன்றுபிற்பகல் 3.30 மணிக்குசுவாமிவிவேகானந்தர்பேச்சைஆரம்பிக்கஎழுந்துஅமெரிக்கசகோதரர்களே! சகோதரிகளே! என்றுஅழைத்தபோதுசபையில்இருந்தஅனைவரும்உணர்ச்சியில்மிதந்தனர். தங்களைமறந்துஅனைவரும்கைதட்டினர். சுவாமிகளின்இந்தஆரம்பம்தமிழ்ப்பண்பாட்டின்தொடக்கமாகஅமைந்தது. பேச்சைத்தொடர்கையில்இந்துசமயம்ஓர்உலகளாவியபரந்தசமயமாகத்திகழ்


© 2025, IRJTSR

வதற்குஆதாரங்களைஅடுக்கடுக்காகஎடுத்துக்காட்டிபிறசமயங்களுடன்ஒப்பிட்டுப்பேசினார்.
பேச்சுக்குஇடையேபகவத்கீதையிலிருந்துஆங்கிலத்தில்அடுக்குமொழியில் மேற்கோள்களைஎடுத்துக்காட்டினார்.

19.09.1893

அன்றையநாள்சொற்பொழிவில்வரலாற்றுக்குமுற்பட்டகாலத்திலேயேதோன்றிஇன்றும்நிலைத்திருப்பதுஇந்துசமயம்என்றார்.
ஒருவர்இன்பத்தில்திளைப்பவராகவும்,
இன்னொருவர்துன்பத்தில்உழல்பவராகவும்ஏன்கடவுளால்படைக்கப்படவேண்டும்? மனதைப்பற்றியும், சடப்பொருளைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், ஓர்உடலிலிருந்துமற்றுமொருஉடலுக்குமாறிச்செல்வதேமரணம்என்றுஇந்துசமயத்தினர்நம்புவதற்கானகாரணங்களைஉதாரணங்களுடன்விளக்கிக்கூறினார்.தாமரைதண்ணிரில்வளர்கிறது; ஆனால்தண்ணிரால்நனைவதில்லை. அதுபோலமனிதன்இதயத்தைஇறைவன்மீதுவைத்துகைகளால்தனதுபணியைஆற்றவேண்டும்என்றுகூறிமுடித்தார்.

சுவாமிவிவேகானந்தரின்சிகாகோசர்வமதமாநாட்டின்உரைகளினால்மேலைநாடுகளில்மட்டுமல்லாதுஉலகம்பூராகவும்இந்துசமயம்உத்வேகம்பெற்றது.
இந்துசமயத்தின்உண்மையானகொள்கைகளைமாநாட்டில்கலந்துகொண்டவர்கள்அறிந்துகொண்டனர்.
மாநாடுநிறைவுற்றதும்சிறிதுகாலம்அமெரிக்காவிலேயேதங்கியிருந்துஇந்துப்பண்பாட்டினைபரப்புரைசெய்யும்பணியினைத்தொடர்ந்தார்.

1894 மார்ச்மாதம்முதல்மேமாதம்வரை3 மாதங்கள்சிகாகோ, நியோர்க், பாஸ்டன்ஆகியஇடங்களில்வேதாந்ததத்துவங்களைப்பற்றிப்பேசினார்.
புதியஇங்கிலாந்துஎன்றபகுதியில்புருக்லின்எதிகல்சங்கத்தலைவர்டாக்டர்லேவிஸ்ஜி.ஜேன்ஸ்என்பவரின்அழைப்பின்பெயரில்
'இந்துசமயத்தின்தத்துவங்கள்'
என்றதலைப்பில்தொடர்ந்துபேசினார்.நியோர்க்கில்தங்கியிருந்தபோதுதனதுதொடர்சொற்பொழிவுகளைஇராஜயோகம்,
ஞானயோகம்போன்றதலைப்புக்களில்ஆற்றினார்.

விவேகானந்தர்அமெரிக்காவில்தங்கியிருந்தபோதுஅத்வைதம், வர்ணாச்சிரமம், பண்பாடு, பக்தி, தர்மம், பகவத்கீதை, முக்தி, சனாதனதர்மம்போன்றநூற்றுக்கணக்கானதலைப்புக்களில்பேசிஇந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஉலகறியபரப்புரைசெய்தார்.இவர்நியோர்க்கில் 'வேதாந்தமையத்தை' ஏற்படுத்திஅதன்கொள்கைகளையும்அங்குபரப்புரைசெய்தார். இதனைமையமாகக்கொண்டுஉலகநாடுகள்பலவற்றில்பலஇந்துசமயநிறுவனங்கள்தோற்றம்பெற்றன.

விவேகானந்தர்பிரித்தானியாசென்றபோது 22.10.1895 அன்றுஇலண்டனில்உள்ளபிரின்ஸ்மண்டபத்தில்நூற்றுக்கணக்கானஅறிஞர்களின்மத்தியில்இந்துசமயத்தின்பெருமைகளையும்வேதங்களின்அவசியங்களையும்தெளிவாகவிளக்கினார்.அதேசமயம், 1896ஆம்ஆண்டுஜீன்மாதத்தில்பிரின்ஸ்மண்டபத்தில்Bhakti Yoka,Renunciationமுதலியதலைப்புக்களில்உரையாற்றினார். பிரித்தானியாவிலும், அயர்லாந்திலும்வசித்தஇந்தியர்களின்சமுதாயமாநாட்டில் 18.07.1896 அன்று“The Hindus and Their Needs”என்றதலைப்பிலும்பேசினார்.

பேராசிரியர்பால்தேசனின்அழைப்பின்பேரில்கேல்(Kiel) நாட்டிற்குச்சென்றசுவாமிவிவேகானந்தர்அங்குஉபநிடதங்களைப்பற்றியும், வேதாந்தசாஸ்திரங்களைப்பற்றியும், ஆதிசங்கரரின்படைப்புக்களைப்பற்றியும் 7 நாட்கள்உரையாற்றினார்.இப்பயணங்களைமுடித்துஇரண்டாவதுமுறைஅமெரிக்காவந்தபோதுகலிபோர்னியாவில்வேதாந்ததத்துவங்களைப்பற்றிதொடர்சொற்பொழிவாற்றினார்.

சான்பிரான்சிஸ்கோவில்தங்கியிருந்துKrishna’s message to the world, Is Vedanta philosophy of future religionஆகியதலைப்புக்களில்உரையாற்றினார். அடுத்துசுவாமியின்ஆன்மீகஉபதேசங்களால்கவரப்பட்டுசிலமேலைநாட்டினர்அவருடையசீடர்களாகமாறினர். பிரஞ்சுநாட்டைச்சேர்ந்தMadame marie louiseமற்றும்ஜீவ்லியான்லேன்ஸ்பார்க்ஆகியோரும்பிரித்தானியாவைச்சேர்ந்த

மார்கரெட்நோபிலும்இவ்வாறுசீடர்களாகினர். இவர்கள்தங்களதுபெயர்களைமுறையேசுவாமிஅபயானந்தா, சுவாமிகிருபானந்தா, சகோதரிநிவேதிதைஎனமாற்றிக்கொண்டார்கள்.

எனவேஇந்துசமயத்தின்காப்பாளராக, தீர்க்கதரிசியாக, புண்ணியபுருஷராக, இந்துப்பண்பாட்டின்தூதுவனாகஉலகநாடுகளில்வலம்வந்தசுவாமிவிவேகானந்தர்இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஉலகஅரங்கில்பரப்புரைசெய்து, மக்களின்உள்ளங்களைஆன்மீகசிந்தனைகளால்கட்டிப்போட்டு, இந்துப்பண்பாட்டினைசர்வதேசபரிமாணமடையச்செய்துள்ளார்என்பதுஇங்கு மனங்கொள்ளத்தக்கது.

## டாக்டர்இராதாக்கிருஸ்ணன்

உலகநாடுகளில்இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைபரப்பியவர்களுள்இந்தியாவினைச்சேர்ந்தடாக்டர்இராதாக்கிருஸ்ணரும்குறிப்பிடத்தக்கஒருவர். அதற்குஎடுத்துக்காட்டாகசமயத்தில்கிழக்கும்மேற்கும்(East and West in Religion) என்றஅவரதுநூல்தக்கசான்றாகும்அதில்ஆன்மீகவளர்ச்சிக்குஇன்றியமையாதவையாககீதைகூறும்வாழ்க்கைத்தத்துவத்தைஅடிப்படையாகக்கொண்டு அவர்உலகமக்களுக்குபயன்படும்விடயங்களைஎழுதினார்.

இராதாக்கிருஸ்ணன்தனதுகீழைத்தேயச்சமயங்களும்மேலைநாட்டுச்சிந்தனையும்(Eastern Religions and Western Thought) என்றநூலில்உண்மையானசமயத்தின்பண்புகளைவிளக்கிக்கூறுகின்றார். எவ்வாறுமேலைநாட்டில்உபநிடதச்சிந்தனைகள்தொடர்ச்சியானசெல்வாக்கைப்பெற்றுவந்துள்ளனஎன்பதைவிளக்கியுள்ளார். அடுத்துசமயங்களைஒப்பிட்டுஆராய்ச்சிசெய்யும்இராதாக்கிருஸ்ணனின்புலமைக்கு 'சமயஒப்பீடு' (Compara-tive Religion)எனும்அவரதுநூல்தகுந்தசான்றாகும். ஆசியாவும்ஐரோப்பாவும்வேறுபட்டவையாகஇருந்தாலும்பொருள்பண்டமாற்றத்திலும்ஆன்மீகத்திலும்முற்றாகவேறுபட்டிருக்கவில்லை. இவ்விடயங்களில்தொடர்புஇருந்தேவந்துள்ளது, எனவரலாற்றுரீதியாகஎடுத்துக்கூறினார். கிழக்கும்மேற்கும்மிகவும்அண்மித்துக்கொண்டிருப்பதாகவும்அவர்கூறினார்.

1926
ஆம்ஆண்டில்முதன்முதலாகஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில்உள்ளமான்செஸ்டர்கல்லூரியில்அப்டன்சொற்பொழிவுகளை(Upton Lectures)நிகழ்த்தினார். இந்துவாழ்க்கைத்தர்மம்(Hindu View of Life)என்றதலைப்பில்நிகழ்ந்தவிரிவுரைமேலைநாட்டுதத்துவஅறிஞர்களைக்கவர்ந்தது.
இச்சொற்பொழிவுகள்பின்னர்நூல்வடிவில்வெளிவந்துபலமொழிகளிலும்மொழிபெயர்க்கப்பட்டன. 'இந்துவாழ்க்கைத்தர்மம்' என்றஇந்நூலில்இராதாக்கிருஸ்ணன்இந்துதர்மத்தையும்சமயத்தையும்பற்றி தெளிவானகருத்துக்களைஉலகமக்கள்புரிந்துகொள்ளும்வண்ணம்விளக்கியுள்ளார்.ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில்ஒப்புமைசமயங்கள்என்றஆராய்ச்சிக்குஇவரேதலைமைதாங்கினார்.
அத்துடன்அமெரிக்காவில்சிகாகோநகரில்ஹெஸ்கெல்சொற்பொழிவுகளையும்(Haskell Lectures)நிகழ்த்தினார்.

துணைவேந்தராகவும்பேராசிரியராகவும்விளங்கியஇராதாக்கிருஸ்ணன்பண்பாட்டுமரபுகளைதெளிவாகவிளக்குவதில்வல்லவராகத்திகழ்ந்தார்.
ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில்கீழைநாடுகளின்சமயநீதித்துறைக்குப்பேராசிரியராகவிளங்கினார்.
விவேகானந்தரின்அடிச்சுவட்டில்இந்துப்பண்பாட்டின்ஆன்மீகஒளியைஉலகில்பரவச்செய்தபெருமைஇராதாக்கிருஸ்ணனையேசாரும்.
இவரதுதலைசிறந்தநூல் 'இந்தியத்தத்துவமாகும்' ’(Indian Philosophy).இதில்வேத, உபநிடதங்கள்,
கீதைபோன்றமூலநூல்களின்கருத்துக்கள்சிறப்பாகஆராயப்பட்டுள்ளன.
தோற்றத்திலும்வாழ்க்கையிலும்கூடஇந்துசமயத்தின், தர்மத்தின், பண்பாட்டின்சிறப்பினைமேற்குலகில்நன்கறியச்செய்தவர்ஆவார்.
அவரதுஇந்துப்பண்பாடுதொடர்பானபணிகள்உலகம்தழுவியதாகஅமைந்ததனால்,
இந்துப்பண்பாடுஇன்றுசர்வதேசநிலையைஅடைந்துள்ளதுஎன்பதுஇங்குநோக்கத்தக்கது.

## சேர்.பொன்.இராமநாதன்.

இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஉலகளாவியநிலைக்குகொண்டுசேர்த்த இந்துசமயஆளுமைகளுள்சேர்.பொன்.இராமநாதனும்ஒருவராவார். அரசியல்முதல்ஆன்மீகம்வரைஅவரின்ஆளுமையும்அகன்றநோக்கும்ஆழமானநுண்ணறிவும்அவருக்கேயுரியதனித்துவமானபண்புகளாகும். இவர்நாவலரின்பணிகளைவிசாலமாக்கியபெருமைக்குரியவர்.

சுவாமிவிவேகானந்தரின்பின்இந்துக்களின்பண்பாட்டுமேம்பாடுகளை – தத்துவமெய்ப்பொருளை – சைவசிந்தாந்தவிழுமியங்களைஉலகத்தினருக்குஅறிமுகப்படுத்தியஈழத்துப் பெருந்தகையாளர்இவர்.இந்துப்பண்பாட்டுஅம்சங்களைஅடிப்படையாகக் கொண்டேஅவரதுபணிகள்யாவும்அரசியல், சமயம், கல்வி, ஆன்மீகம், பொருளாதாரம், கலை, கலாசாரம்எனசகலதுறைகளையும்உள்ளடக்கியதாகஅமைந்திருந்தன. இந்துக்களின்பண்பாட்டுக்கருவூலங்களையும்பிறமதகலாசாரம்எனும்கருமேகஇருள்சூழ்ந்திருந்தகாலத்தில்அவ்விருளைஅகற்றும்ஞானசூரியனாகஇந்துப் பண்பாட்டுபேரொளியாகஈழத்திலேதோன்றியஅவதாரபுருஷனார்.

சைவசித்தாந்தக்கொள்கையில்அதியுன்னதஆர்வம்கொண்டசேர்.பொன்.இராமநாதன்ஈழத்தில்மட்டுமல்லாதுஉலகஅரங்கிலும்அதனைபரப்புரைசெய்தார். அமெரிக்காவிற்குசென்றஇவர்சைவசித்தாந்தம்பற்றியஉயர்ந்தகருத்துக்களைதனதுபிரசங்கங்கள்மூலம்தெரிவித்துஅமெரிக்காமக்களைநல்வழிப்படுத்தமுனைந்தார். அத்துடன்‘The culture of the soul among the western nations’ (மேலைநாட்டார்உள்ளத்தின்பண்புநிலை) என்கின்றஇவரதுநூல்சைவசித்தாந்தஅடிப்படையில்எழுதப்பட்டதென, ஜேர்மன்நாட்டைச்சேர்ந்தசமயப்பிரசாரகராகியஎச்.டபிள்யூ.சோமறஸ்(H.W.Schomerus) என்பவர்ஜேர்மன்மொழியில்எழுதியசைவசித்தாந்தம்(Saiva Siddhanta)எனும்நூலில்கூறியுள்ளார்.

மேலும்இவரதுஅழைப்பிற்குஇணங்கஜேர்மன்நாட்டிற்குச்சென்றசெர்.பொன். இராமநாதன்ஆற்றியசொற்பொழிவுகள்யாவும்சைவசித்தாந்தஅடிப்படையில் அமைந்தவைஎன்பதுமுக்கியமாககுறிப்பிடத்தக்கது.அத்துடன்புகழ்பெற்ற கொலம்பியாபல்கலைக்கழகம், ஹாவாட்பல்கலைக்கழகம்,

பல்ரிமோரிலுள்ளயோன்கொப்கின்ஸ்பல்கலைக்கழகம், கொர்நெல்பல்கலைக்கழகம்ஆகியஉயர்கல்விநிறுவனங்கள்சேர்.பொன்.இராமநாதனைஅழைத்துச்சமயசொற்பொழிவாற்றும்படிகேட்கஅவரும்அங்குசென்றுசமயசொற்பொழிவுகளைதிறம்படஆற்றினார்.

அமெரிக்கமக்கள்அவருடையசொற்பொழிவுகளைக்கேட்டபின்கடவுள்என்றால்என்ன;அவர்கற்பனைகடந்தசோதி; கருணையேவடிவானவர்; சமயவாழ்வுஎப்படிஅமையவேண்டும்; சமயசாஸ்திரங்களின்மகிமைஎன்பனபற்றியதெளிவானவிளக்கத்தினைப்பெற்றனர்.அதனால்மகிழ்ந்தஅவர்கள்சேர்.பொன்.இராமநாதனைஅங்குதங்கியிருந்துசைவசித்தாந்தம்பற்றிகருத்துரைவழங்குமாறும்கேட்டுக்கொண்டனர்.

'சொலல்வல்லன்சோர்விலன்அஞ்சான்அவனை

இகல்வெல்லல்யார்க்கும்அரிது'

என்றகுறளுக்குஏற்பவாழ்ந்தசேர்.பொன்.இராமநாதன்சர்வதேசப்புகழ்பெற்றஒருவரானார். அமெரிக்காவில்அவர்சைவசித்தாந்தச்சொற்பொழிவுஆற்றும்பொழுதுஅவர்கையாளும்நுட்பம்மிகஅருமையாகஇருந்தது. சேர்.பொன்.இராமநாதனுடையசர்வதேசப்புகழ்பெற்றசெய்தியைஅறிந்தஅமெரிக்கமக்கள்அவருடையபக்தியும், தத்துவமும்நிரம்பியசொற்பொழிவைக்கேட்கவும், இந்தியப்பாணியில்கம்பீரமாகஅணியப்பெற்றஆடையுடன்அவரின்தோற்றத்தைக்காணவும்ஆர்வத்துடன்மக்கள்திரண்டனர்.

அமெரிக்காவில்கிறீன்ஏக்கர், பொஸ்டன், நியூயோர்க்ஆகியஇடங்களில்உள்ளபல்கலைக்கழகங்களுக்குச்சென்றுஅங்குநிலவியகல்விமுறைகளைஆராய்ந்ததோடுசமயம்பற்றிஅமெரிக்கமக்களின்மனதில்தெளிவுஏற்படுமாறுசொற்பொழிவாற்றினார்.இராமநாதன்அவர்கள்தமதுஅமெரிக்கவிஜயத்தின்போதுபொஸ்டன், நியூயோர்க், வாசிங்டன்போன்றநகரங்களிலுள்ளபல்கலைக்கழகங்களிலும், கலைமன்றங்கள்,

சமயமன்றங்களிலும்ஆற்றியசமயப்பண்பாட்டுப்பேருரைகள் 'மேற்குநாடுகளிற்காணும்ஆன்மீகப்பண்புகள்' என்னும்நூலாகவெளிவந்தது.

அமெரிக்காவில்இராமநாதன்ஆற்றியஉரைகளில் 'கிழக்கினதும்மேற்கினதும்ஆன்மா' (The Spirit of the East and West)என்றதலைப்பில்அமைந்தஉரையானதுஉயர்ந்தஆன்மீகசிந்தனைகளை உலகிற்குவழங்குவதாகஅமைந்தது.அந்தஉரை, இறைக்கோட்பாடு, சிவதரிசனம், ஆன்மீகவாழ்வு, அன்பு, ஆன்மீகமேம்பாடு, பண்பாடு, குருவின்மகிமை, இந்துதத்துவம்ஆகியபண்பாட்டுவிடயங்களைஉள்ளடக்கியதாகஅமைந்தது. இந்தியநாகரிகம்பற்றிஅவர்சிறந்ததொருவிளக்கத்தைஅளித்தார். நாகரிகம்என்பதுஆன்மீகம்சார்ந்ததேஒழியஉலகியலைச்சார்ந்தஒன்றல்லஎன்றவிளக்கம்உலகமக்களைசிந்திக்கவைக்கும்கருத்துக்களாகும். இராமநாதனின்இவ்வுரைகிழக்கில்மேன்மையுற்றஇந்துப்பண்பாட்டின்விழுமியங்களைமேற்குலகினர்தெளிவாகஉணர்ந்துகொள்வதற்குவழியமைத்தது. இதனால், அமெரிக்கரானமைரன்பெலப்ஸ், அவுஸ்திரேலியரானஎல்.ஆர்.ஹரிசன்அம்மையார்போன்றபலமேல்நாட்டுச்சீடர்கள்நாடிவந்துஞானோபதேசம்பெற்றுஇவருடையசீடர்களாகினர்.

இவ்வாறுசேர்.பொன்.இராமநாதன்அமெரிக்கா, மேற்குஐரோப்பாபிரயாணங்களின்போதுஇந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளை முன்வைத்துநிகழ்த்தியசொற்பொழிவுகளாலும்இந்துப்பண்பாடுதொடர்பாக எழுதியபிறமொழிநூல்களாலும்இந்துப்பண்பாடுஉலகளாவியநிலையைஇன்றுஅடைந்துள்ளதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

## சுவாமிவிபுலாநந்தர்

முத்தமிழ்வித்தகர்என்றும்உலகிலேமுதலாவதுதமிழ்பேராசிரியர்என்றும்புகழப்படுகின்றசுவாமிவிபுலாநந்தரும்இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஉலகஅரங்கிற்குஎடுத்துச்சென்றுசர்வதேசபரிமாணமடையச்செய்தஇந்துசமயஆளுமைகளுள்முக்கியமானஒருவராவார்.இவர்கிழக்கிழங்கையில்காரைதீவுஎன்னும்ஊரில்தோன்றியபுண்ணியபுருஷர்.

சுவாமிவிபுலாநந்தர்இந்தியநாட்டுத்தமிழகத்தில்வாழ்ந்தகாலப்பகுதியிலேஸ்ரீ இராமகிருஸ்ணவிஜயம்எனும்தமிழ்இதழுக்கும், வேதாந்தகேசரிஎனும்ஆங்கிலத்திங்கள்வெளியீட்டிற்கும்ஆசிரியர்ஆனார்.சுவாமிகளின்பேரறிவுத்திறத்தையும்பெருங்கருணைஇயல்பினையும்ஸ்ரீஇராமகிருஸ்ணமிஷன்முழுமையாகப்பயன்படுத்திக்கொண்டது. வேதாந்தகேசரியில்தமிழ்மொழியின்தொன்மையும், சிறப்பும்பற்றிஎழுதினார். வேதாந்தகேசரியில்எழுதியகட்டுரைகள்தனிநூலாகத்தொகுக்கப்பட்டுசென்னைஇராமகிருஸ்ணமிஷன்வெளியீடாகவெளிவந்தது. அதில்“The Book of Books of Tamil Land”எனும்திருக்குறளைப்பற்றிஎழுதியகட்டுரையும்இடம்பெற்றிருந்தது.

தமிழ், ஆங்கிலம், வடமொழிஆகியவற்றுடன்இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபுமுதலானபன்மொழிப்புலமைபெற்றிருந்தசுவாமிவிபுலாநந்தர், ஆங்கிலவாணி, விவேகானந்தஞானதீபம், கர்மயோகம், ஞானயோகம்முதலியபலமொழிபெயர்ப்புநூல்களைஸ்ரீஇராமகிருஸ்ணமடாலயத்தின்வாயிலாகவெளியிட்டார். 1939இல்பிரபுத்தபாரதாஎனும்இதழுக்கானஆசிரியர்பதவியைஏற்றுக்கொள்வதற்காகஇராமகிருஸ்ணமிஷன்தலைமையகத்தால்விபுலாநந்தஅடிகள்அழைக்கப்பட்டார்.

இந்தஇதழினூடாகஅடிகள்பழந்தமிழ்இலக்கியங்களையும், பக்திஇலக்கியங்களையும்மொழிபெயர்ப்புக்களுடன்வெளியிட்டார். 1940 ஜனவரிஇதழில்தொண்டரடிப்பொடியாழ்வார்திருப்பள்ளியெழுச்சியைஆங்கிலத்தில்மொழிபெயர்த்துள்ளதோடுதிருவிளையாடல்புராணம்மற்றும்பாண்டிமாதேவி, தாடகைப்பிராட்டி, திருமங்கையாழ்வார்வரலாற்றையும்அவர்களின்பாடல்களையும்மொழிபெயர்த்தும்எழுதியுள்ளார்.

சுவாமிவிவேகானந்தர்வேதாந்தக்கொள்கைகளைமேலைநாட்டில்பரப்பியது போன்று, விபுலாநந்தஅடிகளைசைவசித்தாந்தக்கொள்கைகளைஅங்குபரப்பும்பணிக

ளில்ஈடுபட்டுழைக்கும்படிதருமபுரஆதினத்தில்அருளாட்சிபுரிந்துவந்தஇருபத்தைந்தாவதுகுருமுதல்வர்கைலைக்குருமணிஅவர்கள், 1944 ஆம்ஆண்டில்கேட்டிருந்தார்கள்.

விபுலாநந்தஅடிகளும்அப்பணியில்ஈடுபடஇசைவுபட்டுஅதற்கேற்பஅம்முயற்சிகளில்ஈடுபடஇருந்தார்எனவும்அதற்கிடையில்அவர்மரணித்துவிட்டார்எனவும்அறியமுடிகின்றது.
விபுலாநந்தஅடிகள்மேற்கொள்ளவிருந்தமுயற்சிகைகூடியிருப்பின்சைவசிந்தாந்தஅடிப்படையிலமைந்தவிபுலாநந்தசபைகள்பலஉலகநாடுகளில்தோன்றியிருக்கக்கண்டுசைவஉலகம்உவந்துநயந்திருக்கும்என்பதில்எவ்விதமானஐயமும்இல்லை.

## கலாயோகிடாக்டர்ஆனந்தகுமாரசுவாமி

இந்துக்கலைகளின்தத்துவத்தைஆராய்ந்துஅதனைஅகிலம்அறியச்செய்தபெருந்தகைகலாயோகிடாக்டர்ஆனந்தகுமாரசுவாமிஆவார்.
அவரதுஆராய்ச்சித்திறத்தினால்தான்உலகம்இன்றுஇந்தியக்கலையையும், சமயத்தையும், பண்பாட்டையும்போற்றுகின்றது.
தமிழுக்குஓர்ஆறுமுகநாவலரையும், தமிழிசைக்குஒருவிபுலாநந்தரையும், கலைகளுக்குஓர்ஆனந்தகுமாரசுவாமியையும்அளித்ததுஈழநாடாகும்.

கலாயோகிஆனந்தகுமாரசுவாமிஅவர்கள்இந்துக்கலைக்கோட்பாடுகளைஇந்திய,
இலங்கைமக்களுக்குமட்டுமல்லாதுசர்வதேசமக்களும்உவந்துநயக்கும்படிஅச்சிந்தனைகளைஆங்கிலமொழிமூலம்எழுதிவெளியிட்டார்.கலாயோகிஅவர்கள்கலைகள்மூலம்சமயத்தையும்,
ஆன்மீகத்தையும்வளர்க்கமுயன்றதேஅவரின்பிரதானபணியாகஇருந்தது.
இந்துப்பண்பாட்டுப்பரிமாணத்தைவெளியுலகிற்குஅறிமுகம்செய்தநூல்களுள்அவரது 'சிவானந்தநடனம்' என்றநூல்(The Dance of Siva) உலகநாடுகளில்பெரும்வரவேற்பைபெற்றது.

அத்துடன்இராசபுத்திரர்ஓவியங்கள்(Rajput Painting), இந்திய, இந்தோனேசியக்கலைவரலாறு(History of Indian and Indonesian Art), வேதங்கள்பற்றியபுதியபார்வை(A new Approach to the Vedas), கலையில்மாற்றம்பெறும்இயற்கை(The Transformation of Nature in Art), இந்தியஅரசியற்கோட்பாட்டில்ஆன்மீகதத்துவமும்லௌகீகஅதிகாரமும்(spiritual Authority and Tempord Power in the Indian theory of Governmeny), இந்துசமயமும்பௌத்தமும்(Hinduism and Buddhism) முதலானஇவரதுபடைப்புக்களும்இந்துப்பண்பாட்டுப்பரிமாணத்தைவெளிஉலகிற்குஅறிமுகம்செய்யத்தவறவில்லைஎன்றேகூறலாம்.

அத்துடன்அமெரிக்காவின்பொஸ்டன்நகரிலுள்ளநுண்கலைப்பொருட்கள்அருங்காட்சியகத்தில்பணியாற்றியபோதுஇந்தியாவினதும், தென்கிழக்காசியாவினதும்கட்டடக்கலை, சிற்பக்கலை, நடனங்கள், ஓவியங்கள்ஆகியவற்றைப்பற்றிஆராய்ந்துகட்டுரைகளையும்நூல்களையும் எழுதிவெளியிடுவதில்ஈடுபட்டுவெற்றியும்கண்டார்.இதனால்இந்துக்கலைகள்பற்றியசிந்தனைகளைஅந்நாடுபெற்றுக்கொண்டதுஎனலாம். இவ்வாறுஇவரதுசெயற்பாடுகளால்இந்துக்கலையம்சங்கள்உலகளாவியநிலையைஅடைந்தன.

## முடிவுரை

இந்தியாவிலேதோன்றியஇந்துப்பண்பாடானதுவரலாற்றுக்காலம்தொடக்கம் பலநாடுகளில்பரவலுற்று, இன்றுஉலகம்பூராகவும்வாழும்மக்களின்வாழ்வியலிலும்இரண்டறக்கலந்துவிட்டஒருசெழுமையானபண்பாடாகத்திகழ்கிறது.இந்துப்பண்பாட்டினைஉலகஅரங்கிற்குகொண்டுசேர்த்து, சர்வதேசவியாபகநிலையடையச்செய்தவர்களில்இந்துசமயஆளுமைகள்போ

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

ற்றப்படவேண்டியவர்கள். அவர்களதுஇந்துசமயம்தொடர்பானபிறமொழிஆய்வுகளும்அவர்களதுஉலகளாவியபயணங்களும்அங்குஅவர்கள்நிகழ்த்தியஉரைகளும், அவர்கள்உருவாக்கியசமயநிறுவனங்களும்உலககெங்கும்இந்துப்பண்பாடுதன்னைஅகலித்துக்கொள்வதற்குகாரணங்களாகஅமைந்தனஎனலாம்.இந்துசமயமானதுமறுமலர்ச்சியினைஅவாவிநின்றபத்தொன்பதாம்நூற்றாண்டுகாலச்சூழலில், பாரதத்தில்விவேகானந்தர், இராதாக்கிருஸ்ணன், ஸ்ரீஅரவிந்தர், சகோதரிநிவேதிதாபோன்றவர்களும்ஈழத்தில்கலாயோகிஆனந்தகுமாரசுவாமி, சுவாமிவிபுலாநந்தர், சேர்.பொன்னம்பலம்இராமநாதன், முதலியஇந்துசமயஆளுமைகளும்தோற்றம்பெற்றுஇந்துசமயத்தினைமறுமலர்ச்சியடையச்செய்ததோடுமட்டுமல்லாமல்அதனைஉலகளாவியநிலைக்கும்இட்டுச்சென்றனர்.இதனால்இந்துப்பண்பாடுஇன்றுஉலகின்பலபாகங்களிலும்வேரூன்றிவளர்ச்சிபெற்று, ஒருசர்வதேசபரிமாணத்தைப்பெற்றபண்பாடாககாணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது.

## உசாத்துணைநூல்கள்


[1] பாலன்.பு., (2008), 'வரலாற்றில்வாழும்சாதனைச்சான்றோர்கள்', பக்.36-50.

[2] கோபாலகிருஸ்ணஐயர்.ப., (1993), 'கிழக்கிலும்மேற்கிலும்இந்துப்பண்பாடு – சிலஅண்மைக்காலப்போக்குகள்', லீலாவதிஇராமநாதன்பெருமாட்டிநினைவுப்பேருரை, பக்.34,35.

[3] கலைவாணி. இ., (2003), 'சேர்.பொன்.இராமநாதனதுஇந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளும்பணிகளும்', இரண்டாவதுஉலகஇந்துமாநாடுசிறப்புமலர், ப.309.

[4] கணேசலிங்கம்.ப., (2009), 'இந்துப்பண்பாட்டுச்சிந்தனைகளைஉலகஅரங்கில்பரப்பியஈழத்துஇந்துசமயப்பெரியார்கள்', நல்லைக்குமரன்மலர், ப.116.

[5] மங்கையர்க்கரசி. தி., ((2007), 'இலங்கைஇந்துமரபில்சேர்.பொன்.இராமநாதன்', இந்துஒளி – பொன்விழாசிறப்புமலர், ப.331.

[6] கௌரிமலர்.ம., (2007), 'சுவாமிவிபுலாநந்தரின்சமயப்பணிகள் - ஒருநோக்கு', இந்துஒளி – பொன்விழாசிறப்புமலர், ப.383.



© 2025, IRJTSR